1416

Regd. No. 878

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்
இவைகளைப் பரவச்செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௨ } காளயுக்தி ௵ ஆடி ௴ 1918 ௵ ஜூலை ௴ { பகுதி

விஷயங்கள்.

1.	தற்காலநிலைமை.—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ.	
2.	சுதேசக்கல்வி—ஆர். ரெங்காச்சாரியார் எம். ஏ. எல். டி.	
3.	மனு ஸ்மிருதியின் ஆசாரம்—பி. எஸ். சாம்பசுப்பையர்	
4.	ஸ்திரீகளுக்கு ஓர் உபந்நியாசம்—மங்களாம்பாள்.	87
5.	பிரம்மஞான தரிசனம். (பாலபாடம்.)—வி. வெங்குசாமி ஐயர் எம். ஏ., எல். டி.	90
6.	ஜீவகாருண்யம்—இராமானந்தயோகி	94
7.	பத்திரிகை விமர்சம்.	93
8	புத்தக விமர்சம்.	96

அ. ரங்கசாமி ஐயர், B. A., B. L., பத்திராதிபர்

தபால் சார்ஜ் உள்பட வருஷ சந்தா இந்தியாவுக்கு ரூ 2.
அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4
தபால் சார்ஜ் வேறு

மதுரை விக்டோரியா அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

ஜெகப் பிரசித்திபெற்ற பிரசவ

வளையம்.

10 நிமிஷம்) (10 நிமிஷம்

மூலிகையடங்கிய இத்தாம்பர வளையத்தைஸ்தி ரீசள் பிரசவகாலங்களில் வலது கையில் அணிந் 10 நிமிஷத்தில் சுகப்பிரசவமாவது நிச்சயம். அ குடும்பங்களில் உடயோகித்தும் இத்தாம்பரவளையம் மிகவும் புகழத்தக்கதேன்றே அறிவிக்கலாயினர்.

தாம்பர வளையம் ரூ 1—8—0

தபால் சார்ஜ் வேறு.

T. A. சாமி,

திருக்கழுக்குன்றம்,

செங்கல்பட்டு ஜில்லா.

---

(1) ஸாக்ரடீஸ் சரித்திரம்.

ஆர். ரெஙகாச்சாரியார் எம். ஏ. எல். டி.

140 பக்கங்கள் அடங்கிய சரித்திரப் புத்தகம், மிகவும் செவ் விய நடையில் எழுதியது. யாவரும் வாங்கிப்படிக்கவேண்டியது.

விலை அணு 12, தபால் சார்ஜ் வேறு.

(2) விக்கிரஹாராதனை—ஒரு சம்பாஷணை. கே.எஸ். ராமசங் கிரையர் விலை 0—1—0. பூர்ணசந்திரோதயம் சந்தாதார்க ளுக்கு 0—0—9. தபால் சார்ஜ் வேறு. ஸ்டாம்பு அனுப் பிப்பெற்றுக்கொள்ளலாம். 25 பிரதிகள் ஒரு தடவை வா ங்குவோர்க்கு 25 % கமிஷன்.

(3) மீனாட்சி சுந்தரம்

அழகிய தமிழ் நாடகம். விலை 0—6—0. தபால் கூ வேறு. பூர்ணசந்திரோதயம் சந்தாதார்க்கு 0–5–0. தபாற் கூலி வேறு.

பூர்ணசந்திரோதயம் ஆபிஸ்,

மதுரை.

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

-MAR 1924

5-MAR 1924

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 9 } காளயுக்தி௵ ஆடி௴ 1918 ௵ ஜூலை௴ { பகுதி 3.

தற்கால நிலைமை.

சுதேசக் கலவி அபிவிருத்தியாகவேண்டுமானால் அதை விசேஷமாகக் கற்பிக்கும் பள்ளிகள் அதிகமாக உண்டாக வேண்டுவதவசியம். அவ்விதப் பள்ளிகள் அதிகமாக அதிகமாக, அப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் பயன் பெறுவதுடன் இதரப் பள்ளிகளும் தாமாகவே இவ்வித உணர்ச்சியை மேற்கொண்டு மாறுதல்களை யடையும். அதனால் இருவிதமும் தேசம் க்ஷேமத்தை யடையும். ஆகையால் சென்ற ஜூன் ௴ 8௳ அடையாற்றில் துவக்கப்பட்ட தேசிய சாஸ்திரக் கலாசாலையையும் சென்னையில் 9௳ துவக்கப்பட்ட வாலிபர் பள்ளிக்கூடத்தையும் 10௳ காலையில் மைலாப்பூரில் துவக்கப்பட்ட பெண்கள் பள்ளிக்கூடத்தையும் அளவில்லா ஆனந்தத்துடன் நல்வரவு கூறி ஆதரிக்கின்றோம்.

*
* *

மைலாப்பூரில் ஏற்கனவே ஒரு பெண்கள் பாடசாலையிருந்தது. அதை மிகுந்த ஊக்கத்துடனும், கவலையுடனும், ஒரு நிர்வாக சபையார் இதுகாறும் நடத்திவந்தனர். சுதேசக்கல்வி யபிவிருத்தி சபையாரிடம் ஒப்புவித்தால் மைலா

ப்பூரில் உள்ள பெண்களுக்கு இன்னும் மேன்மையான படிப்பும் சிலாக்கியமும் ஏற்படும் என்று எண்ணி அங்ஙனம் அப்பள்ளிக்கூடத்தை அச்சபையாரிடம் ஒப்புவித்தார்கள். சுதேசக் கல்வி யபிவிருத்தி சபையின் நிர்வாகச் சபைக்குத் தலைவரான மாது ஸ்ரீ அன்னிபெஸண்டம்மையவர்கள் 10வ காலையில் அப்பள்ளியின் புனர்ஜன்ம சமயமாகிற இச்சுபதினத்தில் அப்பள்ளிக்கூடத்தை துவக்கும்போது சில ஆசீர்வசனங்களைக் கூறித் திறத்தல் மகோற்சவத்தைக் கொண்டாடும்படி ஸ்ரீமதி ஸரோஜினி தேவியவர்களைக் கேட்டுக்கொண்டனர். அங்ஙனம் அவர்களும் வந்திருந்து சில அழகிய வார்த்தைகளைக் கூறி மங்களகரமாய் சுபகாரியத்தை நன்கு நிறைவேற்றினார்கள்.

***

முதன் முதல் மாது ஸ்ரீ அன்னிபெஸண்டம்மையவர்கள் இப்பள்ளிக்கூடத்தில் குழந்தைகள் சுகமே உட்காருவதற்கு நாற்காலிகள் அல்லது கட்டில்கள் ஏற்றவையல்லவென்றும், ஆகையால் அவைகளைப் போடுவதாக உத்தேசமில்லையென்றும், ஆனால் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு பாயினால் செய்த ஆசனமும் புஸ்தகங்கள் வைத்துக்கொள்ள ஒரு சிறு கை மேஜையும் அளிக்கப்போவதாயும், இதுதான் இந்தியாவிற்கு ஏற்ற வழக்கமென்றும், கால்களைத் தொங்கவிட்டுக்கொண்டு கட்டில்களில் குழந்தைகள் உட்காருவது சரீர ஆரோக்கியத்துக்கு ஏற்ற வழக்கமில்லாததாயிருப்பதோடு, தேசாசாரமில்லாததாகையால் அதைத் தவிர்த்து நம் நாட்டுக்கு ஏற்ற வழக்கங்களை அனுசரிப்பதே சரியென்றும் கூறினார்.

***

இந்திய ஸ்திரீகள் தொன்று தொட்டுத்தரித்து வரும் உடையானது மிகவும் அழகாயும் நாகரீகமுள்ளதாகவும் இருக்க, அதைத் தவிர்த்து ஆங்கில ஸ்திரீகளின் உடையைத் தரிக்க இந்திய ஸ்திரீகள் ஆசைப்படுவது மிகவும் விசனத்துக்குக் காரணமானது என்றும், இப்பள்ளிக்கூடத்தில் இந்திய ஸ்திரீகளின் உடையையே தரிக்கும்படி குழந்தை

கள் இங்குக் கற்பிக்கப்படுவார்கள் என்றும், இன்னும் ஒவ்வொரு விஷயத்திலும் இந்தியப் பெண்மணிகள் எப்படித் தங்கள் இயற்கை மேன்மைகளையும் வனப்புகளையும் விருத்தி செய்துகொண்டு இந்நாட்டுக்குப் பெருமை விளைப்பார்களோ அப்படி அவர்களை இங்குப் பயிற்றுவதாகத் தாம் கருதியிருப்பதாகவும் கூறி முடித்தார்.

***

அதன் பின்னர் ஸ்ரீமதி ஸரோஜினி தேவியார் கூறியதாவது: ஒரு தோட்டக்காரன் தன் தோட்டத்தை முதன் முதல் சுத்தம் செய்து உழுது செடியின் விதையை விதைப்பதற்காக பள்ளத்தை வெட்டி அதில் ஏற்ற உரம் இட்டு அப்பால் அதில் விதை விதைக்கும் சமயம் தான் முக்கியமான சமயமே யொழிய அச்செடியானது வளர்ந்து பூத்துப் பலனுக்குவரும் சமயம் அவ்வளவு முக்கியமல்ல. அது போல் இந்தியப் பெண்களின் உண்மையான க்ஷேமத்துக்கும் நன்மைக்கும் காரணமாகும் கல்வியைப் புகட்டும் வண்ணம் இன்று ஸ்தாபிக்கப்படும் இப்பள்ளியின் அங்குரார்ப்பணமே முக்கியமான தினமாகும். விதைக்குள் மறைந்து பொதிந்து கிடக்கும் இலைகளையும், கிளைகளையும், புஷ்பங்களையும், பழங்களையும், நாம் நிச்சயமாய் பார்ப்போம், அனுபவிப்போம் என்ற நம்பிக்கையானது எப்படி நம்மை வலுவுறுத்துகிறதோ அங்ஙனம் இன்று விதைக்கும் விதையினின்று மிகவும் ரமணீயமான விளை பலன்களை நிச்சயமாயடைவோம் என்று நாம் திண்ணமாயிருக்கிறோம். ஆதிகால முதல் இந்தியாவில் பிறந்து இந்நாட்டை மேன்மைப் படுத்திய உத்தமிகளின் சரிதங்களின் ரஹஸ்யங்களாகிற விதைகளை இக்குழந்தைகளின் மனத்தில் விதைப்பதால் வருங்காலத்தில் இவ்விதைகள் இன்னும் அதிகமான உத்தமகுணங்களாயும், அழகிய சிறப்புகளாயும், வெளிப்படும் என்பதில் என்ன சந்தேகம்? முற்காலத்துக்கு ஏற்ற சிறந்த குணங்களுடன் இக்காலத்திற்கு உகந்த சீரிய குணங்களையும் புகட்டவேண்டுவது முக்கியமாயிருக்கிறது. ஆகையால் அதற்கு

ஏற்படி நம் சிறுமிகளைப் பயில்விக்கவேண்டும். முற்காலத்துப் பதிவிரதைகளின் சீரிய குணங்களாவன, சுயநலம் பாராட்டாமல் பர்த்தாவுக்கடங்கி நடத்தலும் ஆத்மபரித்யாகம் செய்தலுமாம். அது மாத்திரம் இக்காலத்துப் பெண்மணிகளுக்குப் போதாது. கணவனுக்குற்ற துணையாய் அவருடன் சமானமான உத்திரவாதத்தை வகித்து உயிர்த்தோழனுடைய சுய பாவத்தையும் வகிக்கவேண்டியதவசியம். ஆகையால் என் முன் நிற்கும் ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய முழுத் தேர்ச்சியையும் ஆகிருதியையும் பெற்று பாரதமாதாவின் அவதாரமாக விருக்குமாறு நான் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

***

வாலிபர் பள்ளிக்கூடத்துக்கு வந்த நல்ல அதிர்ஷ்டத்தைப் பற்றி மிகவும் சந்தோஷிக்கிறோம். மதப்பயிற்சியை புகட்டுவதற்கு ஏற்ற ஒரு ஹிந்து உபாத்தியாயராக யாரை நியமிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில் கன ஸ்ரீ ஹைகோர்ட்டு ஜட்ஜு டி. சதாசிவையர் அவர்கள் தான் அவ்வுத்தரவாதமான வேலையைச் செய்வதாக கருணையுடன் ஒப்புகொண்டார். இவ்வுத்தமருடைய முதிர்ந்த ஞானத்தையும், சிறந்த கிருஷ்ண பக்தியையும், மாசற்ற ஒழுக்கத்தையும், அறியாதவர் கிடையாது. இவரை விட மதப்பயிற்சியைக் கொடுக்கவல்ல வேறு உபாத்தியாயர் கிடைப்பது அரிது என்று சொல்லவேண்டியது இல்லை. இப்பள்ளியில் பயிலும் மாணாக்கர்கள் பாக்கியசாலிகள் தான். ஒவ்வொருவனும் தன்னால் கூடிய மட்டும் உயர்ந்த வேலையைச் செய்யவேண்டுமானால் அவன் ஆனந்தமாக இருக்கவேண்டும். பெரியவர்கள் ஒருக்கால் விசன முற்றிருந்தாலும் சிரமப்பட்டு கொஞ்சம் கொஞ்சம் தங்கள் முயற்சியால் கூடுமான வரை செய்யவேண்டிய கருமத்தை செய்து முடிப்பார்கள். ஆனால் குழந்தைகளும் வாலிபர்களும் மனதில் சந்தோஷமில்லாவிடில், ஊக்கமற்று மனச் சிதைவுற்று

ஒன்றும் செய்ய முடியாமல் திகைத்து நிற்கிறார்கள். இப்பள்ளிக்கூடத்தில் அன்பினால் தான் வாலிபர்கள் ஆளப்படுவார்களே யொழிய பயத்தினால் அல்ல. விடுமுறை நாள் முடிகிறதே என்று ஏனைய பள்ளிக்கூட மாணாக்கர்கள் ஏங்குவது போல இப்பள்ளிக்கூட மாணாக்கர்கள் ஏங்கமாட்டார்கள். மேலும் காலையில் ஏழுமணி முதல் பத்து மணி வரையில் இப் பள்ளிக்கூட நேரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சகிக்க முடியாமல் வெயில் காயும் காலத்தில் பாடங்கள் படிக்கும்படி மத்தியானப்பள்ளிக்கூடம் வைப்பது ஆரோக்கியத்துக்கு விரோதம் என்று அவ்வழக்கத்தை இப்பள்ளியில் அனுசரிக்காதது பாராட்டத்தக்கது.

***

சென்றஜூலைமீ 10உயன்று இதே தேசீயக்கல்வியபிவிருத்தி சபையாரால் சென்னை கீழ்ப்பாக்கத்தில் வியாபாரக் கல்விக் கலாசாலையானது துவக்கப்பட்டது. சென்னையில் இதுகாறும் வியாபாரக் கல்வியைப் புகட்டத்தக்க உயர்தரக் கலாசாலை கிடையாது. ஆகையால் இக்கலாசாலையை ஸ்தாபித்ததற்காக நம் ராஜதானியிலுள்ளோர் யாவரும் இச்சபையாருக்கு வந்தனமளிக்கக் கடமைப்பட்டுள்ளோம். மூன்று வருஷகாலம் ஒவ்வொரு மாணாக்கனும் இவ்வுயர்தர வித்யையைப் பயிலவேண்டும். மாதம் 1-க்கு 30 ரூ வீதம் உபகாரச் சம்பளம் கொடுக்க அநேகர் முன் வந்திருக்கிறார்கள் என்று முன்னமேயே கூறியிருக்கிறோம். சென்னையில் கொடையாளிகளில் சிறந்த ஸ்ரீமான் கலவால கண்ணன் செட்டியார் அவ்விதம் இரண்டு மாணாக்கர்களுக்கு உபகாரச்சம்பளம் கொடுப்பதாக 3 வருஷச் சம்பளம் ரூ. 2072யும் அன்று கொடுத்தார். ஸ்ரீமான் வி. மாசிலாமணி பிள்ளை 1 மாணாக்கனுக்காக ரூ 1036யைக் கொடுத்தார். இவ்விதமாக பிரமுகர்கள் இப்பெரு முயற்சியை ஆதரிப்பது சந்தோஷத்தை விளைக்கின்றது. தேசீய சர்வகலாசாலைக்கு சான்ஸ்லரான ஸர் ரவீந்திரநாத டாகோர் அவர்கள் அமெரிக்காவுக்குப் புறப்படும் சமயமாயிருப்பதால் அவர்கள் இங்கு வரக்கூடவில்லை, ஆகையால் அதற்கு அடுத்த

பதவியை வகித்தவரும் ஆச்சர்வ கலாசாலையின் புரோசான் ஸலருமான ஸ்ரீமான் டாக்டர் ஸுப்ரமணிய ஐயர் அவர்கள் இந்த வியாபாரக் கல்விக் கலாசாலையை திறந்து வைக்கும் உற்சவத்தை நடத்திவைத்தார்.

***

இக்கலாசாலையின் நோக்கங்களைப் பற்றி மாது ஸ்ரீ பெஸண்டம்மையவர்கள் அடியில்கண்டபடி கூறினர்: மேல் நாடுகளில் தேவை அதிகமாக ஆக நாகரீகம் மேன்மையான தென்று எண்ணுகிறார்கள். ஆனால் இந்தியாவிலோ தேவைகள் எவ்வளவுக் கெவ்வளவு குறைகின்றனவோ அங்கே தான் நாகரீகம் இருக்கின்றதென்று நாம் எண்ணுகிறோம். இதுகாறும் உலகத்தில் தோன்றிய நாகரீகங்களுக்குள் இந்தியர்கள் கொண்ட நாகரீகம் தான் சிறந்தது என்று நாம் எண்ணுகிறோம். பொருளைக் காட்டிலும் ஞானமே சிறந்தது. போட்டியை அஸ்திபாரமாகக் கொண்ட மேல்நாட்டு நாகரீகம் சிதைவுற்றுக் கிடப்பதை நாம் கண்ணால் காணவில்லையா? ஒற்றுமையையும் சகோதர பாவத்தையும் ஆதாரமாகக் கொண்ட புதிய நாகரீகமானது இந்தியாவிலிருந்து கிளம்புவதை நாம் சீக்கிரம் காணுவோம். சண்டையிட்டு ஜயிக்கவல்லது தான் கடைசியில் எஞ்சும் என்பது மிருகங்களின் அபிவிருத்திக்கு ஏற்ற உண்மையாகும். ஆனால் மானிடர்கள் அபிவிருத்திக்கு ஏற்ற விதி தியாகமே யாம். ஆகையால் எப்மட்டில் ஒருவன் பிறருக்கு நன்மை செய்கிறானோ, அதிலும் தன்னைவிட பலத்திலும், ஞானத்திலும், பொருளிலும, மற்ற விஷயங்களிலும் குறைந்தவர்களுக்கு யார் உதவி செய்கிறானோ அப்மட்டில் அவன் தன்னுடைய உண்மையான மானிடத் தன்மையை விளக்குகிறான். முன் காலத்தில் இந்திய அரசர்கள் தனியரசர்கள் என்று கூறுவதுண்டு. ஆனால் அரசன் தர்மத்துக்குப் பயந்து அதையனுசரித்தே நடந்தான். மேலும் சரித்திரங்களிலும் புராண இதிகாசங்களிலும் அரசனுக்கு உதவி செய்ய ஆலோசனை சபைகளிருந்ததாக நாம் படிக்கிறோம். அச்சபைகளில் வர்த்தக

வியாபாரிகள் அநேகர் இருந்தார்கள். அவர்கள் மிகவும் உலக ஞானமும் அனுபவமும் மனோவிசாலமும் பெற்றவர்கள். ஆகையால் இக்காலத்து வியாபாரிகளும் உயர்பதவியை அடையவேண்டுமானல் தங்கள் அறிவை விசாலப்படுத்தவேண்டுவதவசியம். முன் காலத்தில் வைசியர்பணம் சம்பாதித்தது சுய நலத்துக்காகவில்லை. அவர்கள் தான் தர்மங்களை நடத்திவந்தார்கள். ஆகையால் பணம் சம்பாதிப்பது உலக க்ஷேமத்திற்காகவே, கெடுதலுக்காகவல்ல. மேலும் இந்தியாவில் வியாபாரம் எல்லாம் எழுத்து ஆதாரவுகள் அவசியமில்லாமலே நடந்ததாகப் படிக்கிறோம். அவர்களுடைய உண்மையானது அவ்வளவு சிறந்தது. ஆகையால் இந்தியாவின் நாகரீகத்துக்கு ஏற்றபடி வியாபாரம் உயரவேண்டும். அதற்காக உயர்தர வியாபாரக் கல்வி அவசியம் வேண்டும். அது உண்டானல் இந்திய வியாபாரமும் ஓங்கி, நாடும் மேம்பாடடையும். அதனல் உலகமே க்ஷேமத்தை யடையும். இந்தியாவானது உலகத்துக்கு எவ்வளவு விஷயங்களோ கற்பிக்கவேண்டியதிருக்கிறது. ஆகையால் இப்பள்ளிகளில் படிக்கும் மாணக்கர்கள் சுயநலத்திற்காகப் படிப்பவர்களல்ல. உயர்ந்த தேச பக்தர்களாக நாட்டிற்கு உழைத்து தாமும் ஓங்கி நாட்டையும் ஓங்கும்படி செய்வார்களாக!

***

சின்னாட்களுக்கு முன்னர் செட்டி நாட்டின் மத்தியில் உள்ள காரைக்குடி என்னும் நகரில் ஆ. வி. பழ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் ஒரு உயர்தரக் கலாசாலையை 1 லக்ஷம் ரூபா செலவழித்துக் கட்டி அதை கனஸ்ரீ ஹைகோர்ட்டு ஜட்ஜு சேஷகிரி ஐயரவர்களைக்கொண்டு திறந்துவைக்கும்படி கேட்டுக்கொண்டார். ஐயரவர்கள் ஆங்கு விஜயம் செய்து உபந்யாசமும் செய்து சுபமுகூர்த்தத்தில் அம்மங்களகரமான காரியத்தை நிறைவேற்றினர்கள். ஐயரவர்களுக்கு உபசாரப்பத்திரிகை ஒன்று தமிழிலேயே படிக்கப்பட்டது. ஐயரவர்கள் உபந்யாசமும் தமிழில் நடந்தது. அச்சமயத்திலேயே வேறு ஒரு தனிகரான செட்டியார் அப்பள்ளிக்கு அடுத்து அதற்கு அங்கமாக ஒரு

ஹாஸ்டல் அல்லது மாணுக்கர் சாப்பிடவும இருக்கவும் ஒரு கட்டடம் கட்டித்தருவதாக வாக்குக்கொடுத்தார். நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் இதுவரை ஏராளமான தர்மகாரியங்களைச் செய்திருக்கிறுர்கள். ஆனல் ஜீர்ணமான கோவில்களை உத்தாரணம் செய்வதிலும், சத்திரம் பாடசாலை கட்டுவதிலும் மட்டுமே அநேகமாக அவர்கள் தர்மம் சென்றுவந்தது. கல்வி என்பது வேதத்திற்குப் பொருந்தும் என்பதில் ஐயமில்லை. இக்காலத்திற்கு ஏற்றபடி ஆங்கிலக் கல்வியும் ஜீவனேபாயம் தேடுதற்கு ஏற்ற கல்வியும் கல்வியே என்றும், அக்கல்வியைக்கொடுக்கப் பள்ளிகளைக்கட்டுவித்தலும் தர்மமே யென்றும நகரத்தார் கொஞ்சம் உணர்ந்து விட்டால், நாடெங்கும் கல்விச்சாலைகளைப் பரப்பிவிடுவார்கள். ஆகையால் அவ்வழியில் நகரத்தார் மனம் செல்கிறது என்று இச்சுபகாரியத்திலிருந்து அறிகிருேம். ஆனல் நம் நாட்டின் உண்மையான மேம்பாட்டையும் சீர்மையையும் பயக்கவல்ல சுதேசக்கல்வியைப் புகட்டுவது இன்னும் சிலாக்கியமாகையால் இப்புதுக்கல்விச் சாலையை தேசீய சர்வகலாசாலையின் ஆளுகையின் கீழ் சேர்த்திருந்தால் இன்னும் நன்மையாக விருக்கும்.

***

மதுரை யம்பதியில் ஜூலைமீ 21, 22தேதிளில் பிரஹ்மஞானசபை தமிழ்க்கிளைச்சபைகளின் பெடரேஷன் கூட்டம் நடந்தது அதற்கு அக்கிராசனம் வகிக்கும்படி மாதுஸ்ரீ பிரஸிடெண்டர்களைக் கேட்டுக்கொண்டார்கள். ஆனல் அவர்களால் வரக்கூடவில்லை. ஸ்ரீமான் அருண்டேல் அவர்களும் வரக்கூடவில்லை. இந்தியன் ஸெக்ஷன் ஜனரல் காரியதரிசி ரிடையர்டு சப் ஜெட்ஜு டி. ராமச்சந்திரராயர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். ஸ்ரீமதி மிஸ். பெல் அம்மாளும் வந்தார்கள். இன்னும் பலரும் வந்திருந்து விமர்சையாக உபந்யாசங்கள் நடந்தன.

ஆர். ரெங்கஸ்வாமி ஐயர்.

சுதேசக் கல்வி.

(48-ம் பக்கத் தொடர்ச்சி)

10. பள்ளிக்கூடங்கள் நடத்தும் நேரங்களில் சில மாறுபாடுகள் செய்யவேண்டும், இப்போது பள்ளிக்கூடங்கள் காலை 10 மணி முதல் 1 மணி வரையிலும், பிறகு 2 மணி முதல் 5மணி வரையிலும், பெரும்பாலும், நடத்தப்படுகின்றன. நம் தேசத்தில் இதுவே வெப்பமான வேளை. வெயிலின் கடூரத்தால் பிள்ளைகள் தளர்ச்சியடைகின்றனர். மத்தியானம் வீடுகளுக்குப் போய் வருவதற்குள் அவர் படும் பாடு யார்தான் படுவார்கள்! காலை போஜனம் 10 மணிக்குள் கிடைப்பது பலர்க்கும் வருத்தமாக இருக்கிறது. அப்படிக் கிடைத்தாலும் சிறிது நின்று களைப்பாறுவதற்கு இடமில்லாமல் வெயிலில் ஓடிவரும்படி நேரிடுகின்றது. இதனால், பிள்ளைகளிடம் ஜீரண சக்தி குறைந்து பல வியாதிகள் ஏற்படுகின்றன. சிலர் உணவின்றியே வரும்படி நேரிடுகின்றது. சில ஏழைப்பிள்ளைகள் மத்தியான உணவின்றியே தவிக்கிறார்கள். இதனால் காலை 8 மணி முதல் 10 மணி வரையிலும் மாலை 3 மணி முதல் 5 மணி வரையிலும் பள்ளிக்கூடம் வைத்தால் போதும். இதற்குத் தகுந்தபடி பாடங்களை அமைத்துக் கொள்ளலாம். சில தேசங்களில் செய்வது போல நம் ஏழைப் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடத்திலேயே உணவளிப்பதற்கும் முயற்சி செய்யவேண்டும். அது கூடாதெனில் சிற்றுண்டியேனும் அளித்தல் நலம்.

11. பாடநேரங்களுக்கிடையே ஓய்வு நேரம் அவசியம். பள்ளிக்கூடங்களில் பாடங்களை அமைப்பதில் முக்கியமாக சிறு பிள்ளைகளுக்குக் கஷ்டம் விளைக்காமல் பாடங்களுக்கிடையே சில நிமிஷங்கள் ஓடியாடி வர இடந்தரவேண்டும். பெரிய பிள்ளைகளும் சில வேளைகளில் தமது இஷ்டம் போல் காலங்கழிப்பது நலம். இதனால் அவரது மனம் களைத்துப் போகாமல் பாடங்களில் செல்லும்.

பள்ளிக்கூடங்களில் "இந்திய மேன் மக்கள் கூடம்' ஒன்றிருப்பது அவசியம். அதில் அன்னோது படங்களைத் தொங்க விடவேண்டும். பிள்ளைகள் தமதிஷ்டம் போல் அங்குச்சென்று அவரைக் கண்ணுற்றும், அவரது ஜீவிய சரித்திரங்களைப் படித்தும், அவரைப்பற்றிச் சம்பாஷித்தும் அவரைப்போல் தாமுமாகவேண்டுமென்ற அவாக்கொள்ள வேண்டும். பாடங்கள் நடக்கும்போது அடிக்கடி அன்னோரைப் பற்றிப் பிள்ளைகளுக்கு அறிவுறுத்தவேண்டும்.

12. வீட்டில் செய்துவரவேண்டிய அப்பியாசங்கள் அனைத்தும் அடியோடே போகவேண்டும். ஏற்கனவே பாடங்கள் அதிகமாகத் தாங்கக்கூடாமலிருப்பதால், பின்னும் பிள்ளைகளை வருத்திப் புண்படுத்துவதில் லாபம் ஒன்றுமில்லை. பிள்ளைகள் கருத்துடன் அக்காரியங்களைச் செய்வாரென்று எதிர்பார்ப்பது நம் அறிவீனத்தைக் குறிக்கின்றது. தாமே அதைச்செய்யாமல் பிறர்செய்ததைப் பார்த்தெழுதி வருகிறார்கள். அதையும் உபாத்தியாயர் கவனத்துடன் பார்க்க அவகாசம் கிடையாது. இவை பிள்ளைகளை விளையாட வொட்டாமலும், வீட்டில் தொந்தரவு செய்யாமலும் அடக்குவதற்கு ஏற்பட்ட வழிகளே தவிர அவர்களது நன்மையின்பொருட்டு ஏற்படுத்தப்பட்டவையல்ல. ஆதலின் பிள்ளைகளின் மனதிற்கு எவ்வளவு சந்தோஷம் விளைக்கலாமோ அவ்வளவும் நாம் செய்யத்தயாராகவிருக்கவேண்டும். வயதானால் தாமே தமது பாடங்களை ஊன்றிப்படிப்பார்கள்.

13. சுதேச உடையையே யாவரும் உடுக்கவேண்டும். இந்துக்கள் இன்னாரென்பதை முன்னாளில் இவரது உடையால் கண்டுகொள்ளலாம். அதுபோலவே பிறஜாதியாரிடமும் இருந்து சமீபகாலத்தில் ஒருவரது உடையை மற்றொருவர் அணியப்புகுந்து விட்டதால், தடுமாற்றம் ஏற்பட்டுவிட்டது. ஒருவர் இன்னாரெனக்கூறுவதற்கு இப்போது சாத்தியமில்லை. யூனிபாரம் அணிந்து கொண்டால் தாம் ஆங்கிலேயர் ஆகிவிடுவதாகவும், அவரைப்போல

மரியாதை பெறலாம் என்றும் வீணில் எண்ணிப்பலர் இடர்ப் படுகின்றனர். இத்தோடு அமையாது கிறிஸ்தவரல்லாத வரும் கிறிஸ்தவர்தரிக்கும் காலரை அணிந்துகொள்ளு கின்றனர். குளிர் தேசத்தில் தாம் அணிந்துகொள் ளுமுடையை இந்த உஷ்ணப்ரதேசங்களில் அணிந்து கொள்ளவேண்டியிருப்பதால் ஆங்கிலேயர்படும் அவஸ்தை அவர்க்கே தெரியும். அதை அறியாமல் நம்மவரும் அவ ரைப்போல் வேஷம் போட்டுக்கொள்வது என்ன புத்தியீ னம்! நம் உடைகளை தரிக்கவேண்டாமென்று அவர் சொல் லுகிறார்களா? அவ்வாறு சொன்னாலும் நாம் அதை ஏன் கேட்கவேண்டும்? நம்மைப்போல் உடை தரிக்கச்சொன்னால், அவர் கேட்பாரோ? ஆதலின் நாம் இதுவரை உடுத்தி வந்தது போலவே இனியும் செய்ய வேண்டும். நமது பிள்ளைகளையும் அவ்வாறு செய்யும்படி தூண்டவேண்டும். சமீபத்தில் சில காலேஜ்களில் நமது பிள்ளைகள் நம் முன் னோரைப் போலவே ஆடம்பரமற்ற உடை தரித்துவரலாம் என்று விதித்திருப்பது நாம் பின்னால் அடையப்போகும் மேன்மைக்கு ஓர் அறிகுறிபோன்றுள்ளது. இவ்விஷயத் தில் நாம் மேன்மேலும் முயற்சித்து, சுதேச உடைகளை யாவரும் தரித்துத் தடையின்றி எங்கும் போகும்படி செய் தல் வேண்டும்.

14. கவாத்துப் பழகவேண்டும். பிள்ளைகளனைவரும் தேகத்தைத் திடப்படுத்தும் தேகப்பயிற்சிகளை நன்று பழகி வருவதோடு, கவாத்தையும் ஒழுங்காகக் கற்றுக்கொள்ள வேண்டும். இதைக்கற்று வரும்போது பலவிதமான குணங் கள் பிள்ளைகளிடம் தாமே அமைகின்றன. தம்மை அடக் கிக்கொள்ளவும், பிறரோடு ஒத்துவேலை செய்யவும், மே லோர் கூறுவதைத் தலைமேல் வகித்து மறுமொழி கூறாமல் நடக்கவும், இதுவே கற்றுவைக்கும். ஒவ்வொருவரும் தேகதிடமும் மனோதிடமும் பெற்றால், அவர் நாட்டிற்கு பெருமையை விளைப்பர். தம் நாட்டைத்தாமே காத்துக் கொள்வது நாட்டினர் கடமை அன்றோ! சில காரணங்

களால் இது வரை நமது துரைத்தனத்தார் யுத்த விஷயங் களில் நம்மைப் பயிற்றுவிக்கவில்லை. இப்போது அவ்வாறு செய்யவேண்டுமென்ற எண்ணம் அவரிடம் பிறந்துள்ளதாயினும், அது நிறைவேறுவதற்குப் பல இடையூறுகள் கிளம்புகின்றன. அவையெல்லாம் சின்னாளில் பகலவன் முன் நிற்கும் பனிபோல நிலைபெருமல் பறந்துவிடும். இவ்விஷயத்தில் யாவரும் கருத்துடன் வேலை செய்வாருக. நாம ஒரு மனதுடன் நமது அரசர்க்கு ஏராளமான படைவீரர்களைத் திரட்டிக் கொடுத்தால், இப்போது நடப்பதுபோல சண்டைகள் இனி உலகத்தில் நடவா. எந்த நாடுகளைப் பார்த்தாலும் அங்கு அனைவரும் சமயம் வந்தால் படைகொண்டு தம் நாட்டைக் காப்பாற்றத் தயார்செய்து கொள்ளுகிருர்கள். அது போலவே நாமும் செய்துகொள்ள நமது சக்ரவர்த்தி விரைவில் இடந்தருவார் என்பதற்கு ஐயமில்லை. இது சரியாக நடந்தேறுவதற்குப் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் இருக்கும்போதே பையன்களின் ஸ்கௌட் சங்கம் என்ற சங்கத்தில் சேர்ந்து தமது குணங்களை பெருக்கிக்கொள்ளவும் தேசாபிமானத்தை வளர்க்கவும் செய்யவேண்டும். இவ்விதம் வளர்ந்துவரும் குழந்தைகளே பின்னர் தீரர்களாய்த் திகழ்வர். இவரே நாட்டிற்கு நிகழ்காலத்தில் ஊன்றுகோல் ஆவர்.

15. பிள்ளைகளுக்கு ஆரம்பமுதல் நமது நாட்டைப் பற்றிய விஷயங்களைப் புகட்டவேண்டும். இது ராஜகீய விஷயம் என்று மறைத்து வைப்பதால் பலவித தீமைகள் ஏற்படுகின்றன. இந்தியர் பலர் ஆட்சியில் இருந்து, பலவித மாறுதல்களை அடைந்து இப்போது இங்கிலீஷ்காரர் ஆட்சியில் இருப்பது எல்லாருக்கும் தெரிந்ததே. ஒவ்வொருவருடைய ஆட்சியிலும் இந்தியர் அடைந்த நன்மைகளை யாவரும் அறியவேண்டும். அந்த நன்மைகளால் நேர்ந்த பலன்களை யாவரும் அடையவேண்டும். பல இடங்களிலும் ஓடும் நீர் கடைசியில் ஒன்றுகூடி கடலில் பாய்வதுபோல, பல நாகரிகங்களும் இந்தியாவில் வந்தேறி நிலவி நம் நாட்

டைப் பெருமைப்படுத்தி உள்ளன. இவை ஒவ்வொன்றிலும் காலத்திற்கேற்பச் சில அரிய அம்சங்கள் காணப்படு. இவை யாவையும் போற்றத்தகுந்தவையே. சில அம்சங்கள் காலாந்தரத்தில் மறைந்து போதலும் கூடும். அவ்விதம் மறைவது நமக்குக்குறைவை விளைக்குமே தவிர மேன்மையைப் பயவாது; ஆதலின் ஒரு ஆட்சியைக் குறைத்து இழித்துப் பேசுவது பெருந்தவறு. நாம் அனைவரும் ஒத்து வாழ்ந்தாலன்றி நாடுமேன்மையை அடையாது. இவ்வொற்றுமை பள்ளியிலேயே பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்படவேண்டும். ராஜாங்க விஷயங்களைச் சரியாக உணர்ந்தால், பிள்ளைகள் நல்ல தேசாபிமானிகளாகி, நாட்டிற்குப்பல வழிகளிலும் புகழ் விளைப்பர். அவர்களுக்கு முறையாக இவ்விஷயங்களைக் கற்பியாமல், தாமே பல வழிகளிலும் அவற்றை உணர்ந்து கொள்ளும்படி இடந்தரின், தீய வழிகளில் செல்வதற்கும் விபரீத உணர்ச்சி கொள்வதற்கும் நாமே அவருக்கு இடம் தருபவராவோம். இதை ஒவ்வொருவரும் அறிந்துகொள்வது அவசியம். நம் நாடு சிறப்படைவதற்கு இதுவே முக்கிய சாதனம். நம் நாட்டில் ஒற்றுமை பெருகுவதற்கு இதுவே வழி. நம் நாட்டில் உளளோர் அனைவரும் மனமொத்து வாழ்வதற்கு இதுவே மார்க்கம். ஆதலின் நமது தேச சரித்திரத்தைச் சரியானபடி ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் கற்பிக்கவேண்டும். நம் சரித்திரத்தில் வரும் வீரர்களையும், மதி நலம் படைத்த பெரியோர்களையும் நாம் உள்ளவாறு அறிந்து போதித்து, அவர்களிடம் பிள்ளைகளுக்கு பக்தியும் விசுவாசமும் பெருகும்படி செய்வது ஒவ்வொரு இந்தியரின் கடமையாகும். அவ்வாறு தம் கடமைகளை அவர் செய்யாமலிருப்பதாலும், இந்தியாவில் வசித்து வரும் பல ஜாதியாருள் சிலர், யாவரையும் சகோதரரெனப் பாவித்து அவருக்கு வேண்டிய உதவிகளைப் புரியாமல் எப்போதும் தன்னலத்தையே நாடிப்பிறரை ஒன்று சேரவொட்டாமற் செய்வதே தமது உயர்விற்கும் லாபத்திற்கும் ஏற்றதெனக்கருதுவதாலும் நமது தாய்நாடு தவிக்கின்றது

சமீபத்தில் பார்லிமெண்டில் நமது இந்தியா மந்திரி கூறியபடி அதிகாரிகளுக்கும் குடிகளுக்கும் ஒரே நோக்கம் இப்போது உள்ளது. அது இந்தியா ஆங்கில ஆட்சிக்குக் கீழே சுதந்தர நாடாக வேண்டுமென்பதே. இவ்விஷயத்தை அறிந்திருந்தும், ஜனங்களுக்குள் கக்ஷிகளும் வாதங்களும் ஏற்பட்டு குழப்பம் உண்டாவது பிறர்க்கு நகைப்புக் கிடமாகும். ஆதலின் இந்தியாவிலுள்ள எல்லா ஜாதியாரும் தம்மை முதலில் இந்தியரென்றே பாவித்துக்கொண்டு ஒற்றுமையை வளர்த்து நம் தாய் நாடு மேனிலையை அடையும்படி உழைத்து வருவாராக. ஒவ்வொரு இந்தியரும் தம் கடமைகளைச் சரிவரச்செய்வதற்குத் தகுதியுள்ளவராகத் தம்மைச்செய்து கொள்வாராக. அவர் தம் கடமைகளை ஒழுங்காகச் செய்யவேண்டுமாயின், அடிமுதல் முறையாக அவர் தேசபாஷைகளில் நாட்டின் விவரங்களையும் நாட்டின் நோக்கங்களையும் பயிலுதல் அவசியம். எல்லா தேசங்களிலும் கட்டாயமாக ஒவ்வொருவரும் படிக்கவேண்டுமென்று விதித்துள்ளார்கள். முதல் 4 அல்லது 5 வகுப்புக்கள் வரை சம்பளமில்லாமலே யாவரும் படிக்கவும் ஏற்பாடு செய்துள்ளார்கள். இதுபோலவே நம்மவரும் ஏற்பாடுசெய்து வந்தால், விரைவில் இந்திய ரனைவரும் மேதாவிகளாகி நாட்டின் புகழுக்கும் பெருமைக்கும் காரணமாவர். காலஞ்சென்ற மது கோகலே யாவரும் ஊதியமின்றிப் படிக்கவேண்டுமென்று பெரு முயற்சி எடுத்துகொண்டனர். அவா நாளில் அது கைகூடவில்லை. இப்போது சில முனிசிபாலிடிகளில் அந்தவிதியை அனுசரிக்கச் செய்வதற்குச் சில பெரியோர் முன்வருகின்றனர். நமது துரைத்தனத்தாரே இவ்விஷயத்தில் ஊக்கங்கொள்வாராயின் விரையில் யாவரும் விருதகியடைந்து நாட்டிற்கு பெரும் புகழ் விளைப்பர். இது நிறைவேறுமாறு இறைவன் அருள் புரிவாராக.

ஆர். ரெங்காச்சாரியார்,

எம். ஏ., எல். டி.

மநு ஸ்மிருதியின் ஆதாரங்கள்.

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

எல்லோரும் மநுவின் குழந்தைகளே. (முற்காலங்களில் எவ்வளவோ உயர்வாயிருந்த நாகரீகங்கள் தான், தற்காலத்தில் நவீனமாக உற்பவித்திருக்கின்றன. இப்போது பிரபலமாய் விளங்கும் மேல் நாட்டு நாகரீகமும் இனி ஓர் காலத்தில் பழையதாகவே ஆய்விடும். அப்போது வேறு புதிய நாகரீகம் தோன்றும். பழைய நாகரீகம் என்போமானால் பழைய நாகரீகத்தின் சின்னங்கள் என்று தான் அர்த்தம். பழைய நாகரீகத்தின் பலமனைத்தும் சேர்ந்துதானே புதிய நாகரீகமாக உருவமெடுக்கிறது! பழைய நாகரீகத்தவர்களுள் பெரும்பான்மையாய் சாமானிய ஜீவர்கள் தான் மிகுந்திருப்பர். ஆயினும் பழைய தர்மத்தைக் காப்பாற்றச் சிலரும் இருப்பர். அதேமாதிரி புதிய நாகரீகம் உலகில் பிறக்கும்போதும் மிகுந்த சக்தியுள்ள அநேக ஜீவர்கள் ஜனிக்கிறார்கள். அவர்களெல்லோரும் பழைய ஓர் நாகரீகத்திற் சிறப்புற்றவர்களாகவே யிருப்பர். அநேக அற்புத சக்திகளைத் தன்னுள்ளடங்கப் பெற்ற பல கருக்கள் மனிதனிடம் போல, ஓர் ஜனஸமூஹத்திலும் குறித்த சில வகைகளில் தேர்ந்த மனிதரும் குடும்பங்களும் உள்ளன. ஆகவே மேல்நாட்டாருக்கும் கீழ் நாட்டாருக்கும் இப்போதுள்ள உறவு தெய்வ ஸம்மதமாகவே ஏற்பட்டதென்போம். ராஜரீக முறையிலும் வியாபார முறையிலும், கல்வி முறையிலும் இருவருக்கும் ஒருவர்க்கொருவர் உறவு ஏற்பட்டிருக்கின்றமையால் ஒருவர்க்கொருவர் பிரயோஜனகரமாயிருக்கவேண்டுமென்பதே கடவுளின் திருவுளம். பரிபக்குவமடையாத ஜீவர்கள் சிதைந்துபோன நாகரீகங்களில் வந்து பிறக்கவேண்டுவதென்ன நியாயம் எனில் அதற்கோர் மூகாந்திரமுண்டு. உலகத்தில் ஒவ்வொரு விஷயமும் அதற்கு நேர் எதிரிடையான மற்றோர் விஷயத்தால் தான் அடக்கியாளப்பட்டு நன்மையாய் நடக்கிறது. உதாரணமாகப் பாருங்கள். கிழவர்களுடைய இயற்கை எப்படியுள்ளது?

ஸத்துவ குணமேலிட்டால் மிக்க ஞானமுடையவர்களாயும் ரஜோ குணம் குன்றித் தமோ குணம் மிகுந்தமையால் சரீரத் தளர்வுற்றவர்களாயுமிருக்கிறார்கள். குழந்தைகளோ அற்ப ஞான முடையவர்களாயும் சோம்பலே இல்லாமல் சுறுசுறுப்புள்ளவர்களாயுமிருக்கிறார்கள். பாட்டன்மாருக்கும் பேரன்மாருக்குமுள்ள அந்யோந்யமான பிரேமை இதனாலல்லவோ? ருதியானது காலதேசவர்த்தமானங்களுக்கேற்ப பீஜ மநுக்களாலும், ரிஷிகளாலும், சீர்த்திருத்தப் பட்டு வந்திருக்கிறது என்பதை நாம் மறக்கவொண்ணாது. ஆகையால் இம்மாறுதல்களுக்கெல்லாம் அடிப்படையான ஆதார உண்மைகளும் மாறாத பொதுக் கருத்துக்களும் இவையென்று நாமறியவேண்டுமானால் "மநுஸம்ஹிதை அல்லது மநு ஸ்மிருதி ஒன்றைமட்டும் படித்தல் போதாது. உலக விகாசத்தைப் பற்றிய சரித்திரங்களான இதிஹாஸ புராணங்களநேகத்தைப் படிக்கவேண்டும். மநு ஸ்மிருதியை இந்தியர் ஆசரித்து வந்த காலத்து ஏற்பாடுகளையும் நடபடிக்கைகளையும் விவரிக்கும் பாகங்களையாவது இதிஹாஸ புராணங்களினின்று அவசியம் படித்தல் வேண்டும். மநுவானவர் வேத விஷயங்களையே தான் ஸ்மிருதி பூர்வமாய் விவரித்திருக்கிறார். வேதத்தை அர்த்தம் செய்வது சாமானியமல்ல. குறுகிய நோக்கமுடையவர்களும் நன்கு படியாதவர்களும் அக்காரியத்தில் துணியலாகாது. மநுவானவர் நன்கறிந்தவராகையால் அவர் ஒவ்வொரு தர்மத்தையும் குறிப்பிட்டிருக்கிறார்.

இம்மாதிரி படிப்பது தற்கால மாணுக்கர்களுக்கு விநோதமாயிருக்கும். பகுத்தறிவில்லாத படிப்பென்றிதைச் சொல்வார்கள். அவர்களுக்கு முக்கியமானதெல்லாம் கிரந்தம் எழுதப்பட்ட தேதி, கிரந்தகர்த்தாவின் திட்டமான பெயர் அவர் சரித்திரம், கருத்தொன்றாயிருந்தாலும் அது எந்தெந்த விடங்களில் எத்தனை விதமாக வெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது என்னும் விவரங்களே யவர்கட்கு முக்கியமானவை. மாறுபாடுகளையும் வேற்றுமைகளையும் படித்

தறியவேண்டிய சந்தர்ப்பத்தில் அவை முக்கியமாயிருப்பினும் ஸநாதனமான உண்மைகளையும் மூல தத்துவங்களையும் ஆராய்வதற்கு அவை அமுக்கியமேயாம். தற்காலத்திலும் கணக்குப் புஸ்தகங்கள் எத்தனையோ புதிது புதிதாய் வெவ்வேறு கிரந்த கர்த்தாக்களால் இயற்றப் படுகின்றன. ஆயினும் நாம் அவைகளிற் கூறப்பட்டுள்ள தத்துவங்களை மட்டுமே பெரிதும் சிந்திக்கிறோம். கிரந்த கர்த்தாக்களைப் பற்றி யார் நினைக்கிறார்கள்? உண்மையை யாரும் தனக்கு மட்டுமென்று உரிமை பாராட்டமுடியாது. எல்லோர்க்கும் அது பொதுவேயாம். எல்லா தேசத்தவர்களுள்ளும் இம்மாதிரியான எண்ணிறந்த கிரந்தங்கள் இருக்கின்றன. முக்காலும் உண்மையான மனித சுபாவத்தை உள்ளதை உள்ளபடியே அழகாய் வர்ணிக்கின்றமையால் அவை சாசுவதமான கீர்த்தியோடு விளங்குகின்றன.

மநுஷ்ய வர்க்க முழுமையையுமே உண்டாக்கி நடத்தி வரும் மநுவானவர் ஓர் பெரிய ஏற்பாட்டை நியமித்திருப்பினும், அதிலுள்ள அநேக நுணுக்கங்களை நிறைவேற்ற பீஜ மனுக்களும் ரிஷிகளும் அநேகர் இருக்கிறார்கள். ஆகையால் இப்பெரிய நியதியைச் சரியாயறியும் பொருட்டு இதிஹாச புராணங்களையும், கர்ண பரம்பரைகளையும் படித்தாராயவேண்டுவதவசியம். பரிபக்குவமான மனத்தையுடையவர்க்குத் தான் இது ஏற்கும். தீர்க்காலோசனையும், பொறுமையும், இணக்கமும், இவர்களுடைய லக்ஷணங்களாகும். வெவ்வேறு விஷயங்களிலும் பொதுவான அம்சங்களை இன்னவென்று அறிவார்கள். இவர்களைத் தான் அபேதபுத்தியுடையவர்களென்போம். வார்த்தைகளைக் காட்டிலும் அவைகளின் கருத்தையே தான் மனதிற் கொள்வார்கள். வார்த்தைகளை வீணே செலவழிக்கமாட்டார்கள். உலகத் தோற்றம் யாவும் உள்ளிருந்தே வெளியே இயங்கும். உயிரினின்றே உடல்களும் உருவங்களும் வெளிப்படுகின்றன. தத்துவசாஸ்திரத்தின் ஓரோர் உண்மை தான் உலக நிகழ்ச்சியினின்று சரித்திரமெனப் பெயர்பெறுகிறது. புதிய புதிய

அபிப்பிராயங்களும் கொள்கைகளும் உயர் நோக்கங்களும் பலவித சாஸ்திரங்களும்/உலகவிகாஸ முறையின் பயனென்றும் நினைப்பார்கள்.

பேதபுத்தியுடைய மற்றவர்களோ, சரித்திரங்களாலும் சாஸ்திரங்களாலுந்தான் உலக விகாஸம் ஏற்படுகின்றது என்று கொள்வார்கள். ஒவ்வொரு விஷயத்தையும்மற்றவைகளிலிருந்து வேறு படுத்திப் பகுத்துப் பகுத்து ஆராய்வார்கள். அவர்களை இலேசாய் இணங்கச் செய்யமுடியாது. வேற்றுமைகளையும் வித்யாசங்களையுமே வற்புறுத்துவார்கள். மற்றவர்களிடத்துக் காணப்படும் பரஸ்பர விரோதமான விஷயங்களையே பெரிதும் பாராட்டுவார்கள். உடலின் காரியம் உயிரென்றும், காரணங்களினின்றே காரிய மேற்படுகிறதென்றும் கொள்வார்கள். பொதுவாக உள்ள பெரிய தத்துவத்தை மறந்து நுண்ணிய அற்ப விவரங்களிலெல்லாம் அதி ஜாக்கிரதையாயிருப்பார்கள். பரமார்த்தமான ஸூக்ஷ்ம விஷயங்களிற் காட்டிலும் ஸ்தூல விஷயங்களைப் பரம ஆதாரமாகக் கொள்வோர்களாயுமிருக்கிறார்கள். ஆகையால் இத்தகைபோர் முற்கூறியபடி ஒப்ப நோக்கி ஆராய்வதில்லை. இவ்விரண்டு வழிகளையும் ஸமமாகக் கொண்ட நடு நிலைமை தான் சிலாக்கியமாயினும் இவ்வுலகத்திலுள்ள எதுவும் அப்படிக் காணப்படவில்லை. ஒரு தரம் ஓர் அம்சத்தைப் பிரதானமாகக் கொண்டு மற்றோர் அம்சத்தை அடக்கியும், மறுதரம் மற்றோர் அம்சத்தைப் பிரதானமாகக் கொண்டு இன்னொன்றை யடக்கியுமே இவ்விகாச முறையில் ஜீவர்கள் பூர்ணம் பெறுகிறார்கள்.

ஆகையால், ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு எண்ணம் பிரபலமாவது இயற்கையேயாம். விவரங்களைப் பெரிதாகப் பாராட்டாமல் பொதுத் தத்துவங்களையே கவனித்து வந்த இந்தியர்கள் ஸ்மிருதி புராணங்களை ஏற்றுக்கொண்டார்கள். இப்போதும் கணிதம் முதலிய சாஸ்திர கிரந்தங்களில் எத்தனை மாறு

பாடுகளேற்பட்ட போதிலும், அவை யாவும் முன்னரே இருந்த தத்துவங்களின் புதிய பிரகாசமென் றறிகின்றோமல்லவா? மேல் நாட்டிலும் இவ்வுண்மையை இப்போது அறிகிறார்கள்.

இதனால் தான் நம் தேசத்திற்கு எவ்வளவோ விபத்துக்கள் நேர்ந்த போதிலுங் கூட வேத புராணங்களில் நமது ஜனங்களுக்கு பக்தி போகவில்லை. அப் பக்தியினாலல்லவோ வேத புராணங்கள் இன்றைக்கும் நம்மிடம் காணப்படுகின்றன. இப்போது நம்மில் அநேகர் அவைகளைப் படித்தறிந்து அர்த்தத்தை அநுபவியாமலிருப்பினும், இனிப் படித்துக் கொள்ளலாமென்பதற்காகவாவது அவைகள் நமது கையில் பத்திரமாயிருக்கின்றனவல்லவா? அவைகளை துரர்த்தம் செய்பவர்களும் வார்த்தைக்கு மாத்திரமாகப் பொருள் தந்து ஆக்ஷேபிப்பவர்களும் எத்தனைபேர்? தன்னலத்தின் சார்பாக அர்த்தம் உரைத்தவர்கள் எத்தனைபேர்? உள் நாட்டுக் கலகத்தாலும், வெளி நாட்டினின்று வந்த படை யெடுப்புகளாலும் நொந்து போயினும், தமது பண லாபத்தையும் உலக வாழ்க்கையையும் பெரிதாக எண்ணாமல் நமது முன்னோர்கள் வேத புராணங்களைக் காப்பாற்றவில்லையா? மறைபொருளையும், அரிய ரகசியங்களையும் தெளிவிக்கக் கூடிய பாஷ்யங்கள் அநேகம் காணாமற்போயினும், இப்போது மேல் நாட்டுச் சாஸ்திரங்களே வேதாந்த உண்மைகளை ஒவ்வொன்றாய்ப் பரிசீலனை செய்து வருகின்றன.

மநுவின் கொள்கைப்படி உலக வாழ்க்கை பிரவிர்த்தி நிவிர்த்தி, யென்னும் இரண்டு பாதிகள் சேர்ந்த ஓர் வட்டம் என்னலாம். இதைத் தான் விரிதல்; ஒடுங்குதல்; சுயநலம், பிறர்நலம்; பற்று, பற்றின்மை; என்று பலவாறாகக் கூறுகிறோம். இதைத்தான் வடமொழிச்சாத்திரங்களிலும் ஸாகாம்யம், நைஷ்காம்யம்; ஸக்தி, ஆஸக்தி; ஸர்க்கம், அபவர்க்கம்; துக்கம், நிச்சிரேயஸ்; கர்மம்; நைஷ்கர்ம்யம் இஹா, உபரமாகி வ்யுத்தானம் நிரோதம்; பந்தம், மோக்ஷம்; ஸஞ்சாரம், பிரதி

சஞ்சாரம் என்றும் பல்வாறாக நமது தத்துவ தரிசனங்கள் பற்பலவற்றுள்ளும் கூறப்பட்டுள்ளன. பௌத்தர்கள் த்ருஷ்ணை என்றும் நிர்வாணம் என்றும் கூறுகிறார்கள். கிறிஸ்தவர்கள் பாபம், என்றும் ரக்ஷிப்பு என்றும் கூறுகிறார்கள், மேல் நாட்டுச் சாஸ்திரங்கள் ஊனக்கண் சம்பந்தப்பட்ட மட்டில் உருவங்கள் தோன்றுவதையும் அழிவதையும் பற்றிக் கூறுகின்றன. நந்நாட்டுத் தத்துவ முறைகளோ உயிரின் இயக்கத்தைப் பற்றியும் ஒடுக்கத்தைப் பற்றியும் கூறுகின்றன. ஸ்தூல ஸூக்ஷ்ம லோகங்களில் உயிர் எவ்விதம் உள்ளது என்பதை நன்கறிந்தே மநுவும் ரிஷிகளும் தர்ம சாஸ்திரத்தை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

உலகத்திலுள்ளவை எல்லாம் உயிரும் உடலும் சேர்ந்தே காணப்படுகின்றன. எதுவும் உடம்போடு தோன்றும்போது அதை ப்ரவிர்த்தி யென்றும் உடம்பைவிட்டு நீங்கும்போது அதைநிவிர்த்தி என்னும் கூறுவோம். அது அற்பப் பிராணியாயிருந்தாலும் சரி, ஓர் ஸூர்ய மண்டலாதிபதியாயினும் சரி இவ்வறுதிக்குட்பட்டே தான் நடக்கின்றன. தோன்றி அழிவதற்கு. மத்தியில்தான் வளர்ச்சி என்கிறோம். தோன்றி இருந்து அழிவதைத் தான் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம் என்றும் சொல்கிறோம். இவ்வுலகத்திலுள்ள ஒன்றும் மற்றொன்றோடு கொஞ்சமும் சம்பந்தமில்லாமல் தனித்திருப்பதன்று. ஆனால் ஒன்றிற்கொன்று தொடுக்கப்பட்டும் வரிசைக் கிரமத்தில் வைக்கப்பட்டுமிருக்கின்றது. கெடிகாரத்தில் பெரிய சக்கரங்களோடு சிறிய சக்கரங்களும் இணைக்கப்பட்ட மாதிரியே இவ்வுலகமும் அதன் ஜீவர்களும் உள்ளன; ஆகையால் ஏதொன்றும் லயமடைந்து விட்டதென்றால், அதோடு முடிந்து போவதல்ல. மறுபடியும் வேறுநயமான சரீரத்தை எடுத்துக்கொண்டு பிறப்பது என்று தான் அர்த்தம். உயிரானது பரிபாகமடைய அடைய உடலும் பக்குவமடைந்தேவரும். ஸ்தூல லோக விஷயங்களை மட்டும் ஆராய்ந்திருக்கிற மேனாட்டுச் சாஸ்திரிகள் இதையே தலைகீழாகக் கூறுகிறார்கள். உடல் நயமாயிற்றானால் உயிரும் பரிபாகமடைந்து வருகிறதென்கிறார்கள்.

இவ் விருபக்கமாக ஊசலாடும் ஜீவன் ஓர் நடுநிலையில் இரண்டு திசைகளையும் முன்னும், பின்னுமாகப் பார்த்து யோசிக்கும் திறமை பெறுகிறான். கல், புல், மிருகவர்க்கங்களைத் தாண்டி மனிதவர்க்கத்தை யடைந்த ஜீவன் அந்நிலையிலிருக்கிறான். அவன் தான் தன்னைத் தானே யடக்கியாளக்கூடும். தான் என்ன செய்யவேண்டும், ஏன் செய்யவேண்டும், எப்படி செய்யவேண்டுமென்று யோசிக்கக் கூடும். இந்தப்பக்குவத்தை யடைந்தமனிதன் தன் முன்னே எதை லக்ஷ்யமாகக் கொள்ளவேண்டும்? அதைப் பூர்ணமாய் அடைவதற்கு அவன் எவ்விதம் நடந்து கொள்ளவேண்டும்? என்று ஆராய்வோம். இரண்டு மார்க்கங்களுக்கும் முடிவான லக்ஷ்யம் கடவுளை யறிதலேயானாலும், தனித் தனியாகப் பார்க்குமிடத்து பிரவிர்த்தி மார்க்கத்தார்க்கு அறம், பொருள், இன்பம் என்பனவே முடிவானவைகளாம். இவைகளைத் தர்மம், அர்த்தம், காமம் என்று ஸம்ஸ்கிருதத்திற் கூறுவார்கள். தர்மத்தைச் செய்து பொருள் தேடுவது தான் நன்மை யென்பர் சிலர்; பொருளைத் தேடிச் சுகம் பெறுவதே நன்மை யென்பர் சிலர்; வேறு சிலர் தர்மம் மட்டும் போது மென்பர், மற்றும் சிலர் பொருளே பிரதானமென்பர். தேர்ந்த உண்மை என்னவெனில், இம்மூன்றும் பிரவிர்த்தி மார்க்கத்தவர்க்கு உரியனவாம்.

விஷயானந்தத்தையல்லவோ பிரவிர்த்தி மார்க்கத்திலுள்ள ஸர்வ ஜீவர்களும் விரும்புகிறார்கள். அப்படியிருக்க தர்மத்தைப் பிரதானமாய்ச் சொல்வானேன்? பொருளையும் ஓர் புருஷார்த்தமாகக் கூறுவதேன்? எனில், எல்லோரும் தமது இச்சைப் பிரகாரமே நடக்கத் தயாராயிருக்கிறார்கள். "உங்களிஷ்டபடி இன்பத்தை யநுபவியுங்கள்" என்று நாம் சொல்லவேண்டுவதில்லை. விசேஷமாக எக்காலத்து மநுஷ்ய வர்க்கத்திற்கு மநுஸ்மிருதியானது எழுதப்பட்டதோ, அக்காலத்தில் ஜனங்கள் பிறர் சொல்லாமலே சிற்றின்பவிஷயங்களில் பிரவிர்த்திக்க ஆரம்பித்தார்கள்.

அதற்கும் முந்தி ஓர் காலத்தில் ஜனங்களுக்குச் சிற்றின்பத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டியிருந்ததாக நமது புராணங்களினின்றும் தெரிகிறது. பிரஹ்மாவானவர் தமது புத்திரனாகிய தக்ஷனைப் பார்த்து பிரஜைகளைப் பெறும்படி ஆக்ஞாபித்தார். அவர் அதன் மேல் கொடும் தவம்புரிந்து, அப்பலத்தால் ஹர்யசிவர்கள் என்னும் 10,000 பிள்ளைகளைப் பெற்றார். அவர்களையும் அவ்விதமே பிரஜைகளை உற்பத்தி செய்யும்படி உத்தரவிட்டார். அப்போது அவர்கள் சற்றும் சம்மதமில்லாதவர்களாகவும் ஒன்றும் அறியாதவர்களாகவும் கீழ்ப் பணிந்து சென்றார்கள். நாரதர் அவர்களுடைய அறியாமையைப் பார்த்து இரக்கங் கொண்டு, ஆத்ம வித்யையை உபதேசித்து ஸம்ஸாரஸாகரத்தினின்றும் தப்புவித்தார். பிறகு சுபலாசுவர்கள் என்னும் வேறொரு ஐயாயிரம் பெயர்களை உண்டாக்கினர். அவர்களையும் இப்படியே நாரதர் தப்புவித்தார். தக்ஷர் உடனே நாரதரைக் கோபித்துக் கொண்டார் இந்திரிய விஷயங்களின் கொடுமையையும், அவைகளாலுண்டாகும் தீவ்ரமான சுகத்தையும், அவ்வளவுக்கவ்வளவு பின்பற்றிவரும் துக்கத்தின் கொடுமையையும் அநுபவியாமல் ஒருவரும் உணருகிறதில்லையாகையால், மற்றவர்களுடைய புத்தியை பேதப்படுத்தலாகாது என்று தக்ஷர் கடிந்தார்.

(தொடரும்.)

பி. எஸ். ராமசுப்பையர்.

ஸ்திரிகளுக்கு ஓர் உபந்யாசம்.

16-ஆம் பக்கத் தொடர்ச்சி.

நம்முடைய முக்கிய தருமங்களானவை 32 அறங்கள், அதாவது ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தோர்க்கு உண்டி பசுவிற்கு வாயுறை, சிறைச் சோறு, ஐயம், தின்பண்டம் நல்கல், அறவைச் சோறு, மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால்வார்த்தல், அறவைப் பிணஞ்சுடல், அறவைத்தூரியம், சுண்ணம்பு, நோய் மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை. கண் மருந்து தலைக்கெண்ணை, பெண்போகம், பிறர் துயர்காத்தல், தண்ணீர்ப் பந்தர். மடம் தடம், கா, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறுவிடுத்தல், விலை கொடுத்துயிர்காத்தல், கன்னிகாதானம், முதலியவைகளை நாம் மறந்தேவிட்டோம். பெண்பாலராய்ப் பிறந்ததினால் இவ்விதமான வேலைகளெல்லாம் நாம் செய்ய முடியாமற் போகுமென்பது அசட்டு பலஹீனம். முன் காலத்தில் வேத சாஸ்திர புராணங்களில் பிரம்ம வாதினிகளென்றும் சத்யோவதுககளென்றும் ஸ்திரி ஜனங்களிருந்ததாகவே காணப்படுகிறது. மணிமேகலைக் காவியத்தில் பிக்ஷுணிகள் உலக உபகாரார்த்தம் ஜீவித்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. அந்த வழிகளை பின்பற்றினால் தான் இனி நமக்கு க்ஷேமம் கிடைக்கும். நம்முடைய சபையார் மட்டுமல்ல, மொத்தமாக ஜனங்களுக்கே இப்போது ஊக்கமுண்டாயிருக்கிறது. இந்த சமயத்தில் நாமவேகத்தைக்குறைக்காமல் பிருதுசக்கிரவர்த்தியைப் போல் நமக்கு வேண்டியவைகளுக்குத் தகுந்த கன்றை உண்டாக்கிக் கொண்டு பாலை அடையவேண்டும். மிஸஸ் டோரதி ஜினராஜதாசம்மாள் நமக்காகப் பாடுபடுகிறார். நாமும் ஒத்துழைத்தால் நலம் பெறலாம். வாசிஷ்டத்தில் சிந்தாமணியைக் கண்டவன் போல் சந்தேகப்பட்டு விட்டால் திரும்ப அடைய வெகு நாள் செல்லும்.

பகவான் கீதையில் கர்மத்தை விட்டால் ஜாதி சங்கரம் உண்டாகுமென்றும் கருமங்களிலுள்ள சாமர்த்தியமே யோகமென்றும் சொல்லுகிறார். ஆகையால் இந்த காலத்துக்கு ஒத்தபடி வேலை செய்து தர்மத்தைக் கைப்பற்ற வேண்டும் மேற்கு ராச்ஜியத்தில் எல்லா வேலைகளிலும் பெண்கள் பழகியிருந்ததினால் இந்த மஹா யுத்தத்தில் தந்தி, தபால் நியாயஸ்தலம் வரையில் வேலை செய்ய சமர்த்தராயிருக்கிறார்கள். அப்படிப்போல நாமும் முன்னேற்றமடைய மஹாத்மாக்களையும் ஈசுவரனையும் வேண்டுகிறேன். ஸ்திரீகளாகிய நமக்குள்ளே ஒருவரையொருவர் தூஷிக்காமல் ஒற்றுமையடையவேண்டும்,

பாலவிதந்துக்களைப் பார்க்கும்பொழுது அறுவறுப்புகொள்ளும் வழக்கங்களை விட்டொழிக்கவேண்டும். பரோபகாரமான வைத்யம், வாத்திமை, தர்ம சேவகம், முதலானவைகளை காட்டிக் கொடுத்து உலக நன்மையில் உழைத்து கௌரவப்படும்படி செய்யவேண்டும். சமுத்திர யாத்திரை செய்வது ஜாதிக்குக் குறைவென்று எண்ணக் கூடாது. இப்பொழுது தேச உபகாரமாக மஹா அபாயமான இந்த யுத்த சமயத்தில் மேல் நாடு சென்றிருக்கிற கனம் பி. வி. நரசிம்மய்யர் மகா-ா-ாஸ்ரீ மஞ்சேரி ராமய்யரைப்போலொத்தவர்களைப் பெரிதும் பாராட்டவேண்டும். பத்து வயதுக்குள் பாணிக்கிரஹணம் பண்ணிவிடவேண்டுமென்று பெண் குழந்தைகளை வித்யாப்பியாசம் இல்லாமல் கெடுக்கக்கூடாது. பிராம்மண ஸ்திரீகளுக்கு உபநயனம் வேதாப்யாசம் முதலியவைகள் அவசியமாக புராணங்களில் காணப்படுகிறது. சீதா தேவியின் முன் ஜென்மமான வேதவதியின் சரித்திரத்தை விட உதாரணம் வேண்டாம். சீதா தேவிக்குச் சூர்ய அர்க்கியம் முதலியவைகளுண்டென்று அனுமார்வாக்கியங்களால் தெரிகிறது. கௌசலாதேவி, ருக்மணி தேவி முதலியவர்கள் நாராயண பூஜை, கௌரீபூஜை அனுஷ்டித்து வந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது நாமும் பூஜை செய்கிறோம. இரண்டுக்குமுள்ள பேதம் அவர்கள் படித்திருந்ததினால் தாங்களே உருகி தெய்வ ஸ்தோத்திரங்களை செய்திருக்கிறார்கள். நாம கண்கட்டி வித்தைக்காரனைப் போல் ஒருவர் சொல்வதைக் கேட்டு செய்து விடுகிறோம். இனிமேல் அந்த அசட்டுத் தனத்தை ஒழிக்கவேண்டும். பெண்கள் வேதம் படிக்கக் கூடாதென்று ஒரு பொய் கட்டுப்பாடு -உண்டாகியிருக்கிறது. அகஸ்தியர் சம்சாரம் லோபாமுத்திரையால் கண்டுபிடித்த இருக்வேத மந்திரங்கள் இப்பொழுதும் காணப்படுகின்றன. இதராம்தவி என்பவர் உண்டுபண்ணின உபநிஷத்து மந்திரங்களை ஐதோய உபநிஷத்தென்று வழங்கப்படுகின்றது. ரொம்பவும் தூரப் போக வேண்டாம். இப்போது பாணிக்கிரஹண சமயத்தில் உச்சரிக்கும் வழக்கமில்லையா? தவிரவும பிள்ளைகளுக்கு பிரஹ்மோபதேசம செய்யும் சமயத்தில் தாயும் தகப்பனும் ஆசாரியரோடு கலந்து செய்யவில்லையா? தீர்க்கமாக என் கற்கக் கூடாதோ தெரியவில்லை. நாமும அஞ்ஞானங்களை ஒழித்து தீர்க்காலோசனை செய்து கலவி கற்று ஞானத்தை யடைய முயலவேண்டும். நியாயம் தெரிந்தால் புருஷர்களையும் கூட தர்மத்தைப்பற்றி கேட்கலாம். பகவான் கீதையிலும் கூட திருதியும், க்ஷமையும், தன் அம்சமென்று சொல்லியிருக்கிறார்.

டுவிலிருந்த பலஹீனத்திலிருந்து பொதுவாகவே ஸ்திரீகளாகிய நமக்கு புத்தி பலம் அதிகரித்து வருகிறதென்றே தோன்றுகிறது. அதை வீணாக்காமல் மேல் நோக்கும் வழியில் உபயோகப்படுத்தத் துணியவேண்டும். தீக்ஷை பெறுவதற்கு ஆண் பெண் என்கிற வித்தியாசமில்லை. வாசிஷ்டத்திலுள்ள சூடாலை சரித்திரமே போதுமான சான்றாகும். சீக்கிரத்தில் வரப்போகிறதாகச் சொல்லும் மஹா குருவோ சாந்தம், பக்தி, தைரியம், முதலியவைகளையே பாராட்டுபவர். அவருடைய வரவைப் பிரார்த்திக்கும் நாம் அந்த குணங்களை அபிவிருத்தி செய்யவேண்டும். இந்தக் காலத்தில் தேக மனோ பலங்கள் ஸ்திரீகளுக்கு அதிகரித்து வருகிறதாகவே தோன்றுகிறது. தவிரவும் பொறுமை, விடாமுயற்சி, இயற்கையாகவே ஸ்திரீகளுக்குள்ள குணங்கள். அவைகளை சுய நலத்துக்கு மாத்திரம் உபயோகிக்கக் கூடாது; பரோபகாரம் லோகோபகாரங்களில் செலுத்தவேண்டும். ஸ்திரீகளுடைய குணத்தைப் பெருமைப்படுத்தி விசுவாசித்ததில் பகவான் கிருஷ்ணமூர்த்தியுடைய சரித்திரம் போதாதா? கோபிகைகள் முதல் குந்தி தேவி வரையில் பக்தி செலுத்தும்படி நடந்துகொண்டு காந்தாரியிட்ட சாபத்தையும் ஏற்கவில்லையா? பதி சிசுரூஷை முக்கியமென்பதும் பகவத் சிசுரூஷை அதற்குமேல் படியென்பதும் விளங்கவில்லையா? பகவத் சிசுரூஷை யென்பதற்கு தன்னுடைய சக்திக்கும் புத்திக்கும் கூடியமட்டும் ஸர்வப் பிராணிகளுக்கும் உபகாரஞ் செய்வது தான் சரியான அர்த்தம். ஈசுவர சேவை செய்பவர்களே சன்னியாசிகளென்றும் அக்கினி கர்மம் முதலியவைகளை விட்டவர்களல்லவென்றும் பகவான் நேரே உபதேசித்திருக்கிறார். மாடாதிபத்யம், காஷாய தண்ட ஜடாபாரங்களெல்லாம் வெளிவேஷங்கள் தான். மாது ஸ்ரீ பிளவாட்ஸ்கி அம்மாள், பெசண்டம்மாள், சகோதரி நிவேதிதா, மீராபாய், மிஸ் வில்சன் முதலியவர்களே சன்னியாசிகளாவார். தர்க்கத்தினாலும் வாதத்தினாலும் நமக்குள்ள சொற்ப ஜீவகாலத்தையும் வீண் போக்கக்கூடாது. நல்லொழுக்கம் ஒன்றையே கைப்பற்றிக்கொண்டு காரைக்காலம்மையைப் போல் ஐயமற நடத்திக் காண்பிக்கவேண்டும். அப்படிப்பட்டவர்கள் மேற்கதியை யடைந்திருக்கிறார்களேயல்லாமல் கதியில்லாமற் போனதாகச் சொல்லவில்லை. இந்த யுக சந்தியில் ஜகத்து தலைகீழாக மாறி வருகிறதாக நினைக்கப்படுகிறது. ஒரு வேளை தலை மேலாக ஆகிறதோ? கிருதயுகம் இப்பொழுது ஏன் வரக்கூடாது? புகை அதிகமாக அதிகமாக ஜ்வாலை கிளம்பும் தருணம் தானே. ஜகத்குருவினுடைய சக்திகள் தேஜஸ் ஜோதி கிளம்பிப் போகிற சமயத்தில் நாம் முன் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும். இது விஷயத்தில் நம்பிக்கையும் சிரத்தையும் இல்லாதவர்களுக்கும் நாம் சொல்ல முடியாவிட்டாலும் கொஞ்சம் ஆசையுடனிருக்கிற சகோதரிகளை வீண் வம்புகளையும் பரிகாசங்களையும் கவனிக்காமலிருக்க கற்பிக்கவேண்டும். பெரியோர்கள் வரும்போது உப்புப் பாண்டம் போலாகாமல் நாம் நாரீகவசமாக ஆக மஹாத்மாக்களைக் கோரி இந்த விஷயத்தை முடிக்க உத்திரவு பெறுகிறேன்.

மங்களாம்பாள்.

பிரஹ்மக்ஞான தரிசனம். (பாலபாடம்.)

அத்தியாயம்—31.

புவர்லோகம். (தொடர்ச்சி.)

புவர்லோகம் அதிக ஜனசங்கமுள்ளது. ஏனெனில் வீரத்தன்மையுள்ள எல்லா புருஷர்களும் ஸ்திரீகளும், விகாரரூபமுள்ள இராக்ஷசர்களும், பூதம்பிரேத பிசாசங்களும், அனேக நூற்றுண்டுகளாய் மனிதர்கள் ஸ்திரீகள் குழந்தைகளுக்கு சந்தோஷத்தை யுண்டு பண்ணிவரும் தேவதைகளும் அங்கே இருக்கிறார்கள். இவர்கள் தவிர தூக்கத்தினால் அல்லது சாவினால் ஸ்தூலசரீரங்களை விட்டு நீங்கின எதார்த்தமான ஜனங்களும் மேல் லோகங்களிலிருந்து இதன் வழியாய்ச் செல்லுகிற ஜனங்களும் அல்லது வேறொருவருக்குதவி புரியும் பொருட்டு கொஞ்சகாலம் மட்டும் அங்கே வசிக்கும் ஜனங்களும் இருக்கிறார்கள்.

சந்தாகிளாஸ் என்பவர் விளையாட்டுக் கருவிகளைச் சுமந்து கொண்டு அங்கேயிருக்கிறார். சிண்டரில்லாவும் இராஜகுமாரனும், சப்பாத்து அணிந்த பூனையும், டாம் தம், சிறிய ரெட்ரைடிங் ஹூடும் ஓநாயும், டான் க்விக்சாட் முதலான கதா நாயகர்களும், வில்லையும் அம்பையும் எப்போதும் கையில் உடையஅழகான சிறிய மன்மதன் முதல், குளம்பு கொம்பு வாலுடன் கூடின பெரிய கறுத்தவிகார சரீரத்தையுடைய பிசாசுவரை ஆயிரக்கணக்கான தேவர்களும் தேவதைகளும் அங்கேயிருக்கிறார்கள். இவர்களிருக்கிறார்களென்று நம்பி இவர்களைப்பற்றிச் சொல்லியிருக்கும் கதைகளைப் படித்து தியானித்த சொப்பனம் காணுகிற ஜனங்களுக்கு இவர்கள் எதார்த்தமானவர்களே. என்றாலும் இவர்கள் எதார்த்தமானவர்களல்ல. ஏனெனில் இவர்களைப்பற்றி சிந்திக்கிற கோடானுகோடி ஜனங்களுடைய மானச ரூபங்களாக இருக்கிறார்கள். இந்த ரூபங்கள் புவர்லோக திரவியங்களால் அமைக்கப்படுகின்றன.

இவ்வித எண்ணங்கள் மனிதர்களிடம் குடிகொண்டிருக்கும் வரை மேற்சொன்ன உருவங்களும் நிலைத்திருக்கும். ஏகதேசம் புவர்லோகத்தை கொஞ்சம் பார்க்கும் படியான பாக்கியம் பெற்ற சில ஜனங்கள் நிஜம் இன்னது பொய் இன்னதென்றும் இயற்கையானது இன்னது கற்பனையானது இன்னதென்றும் பகுத்தறியும் படியான படிப்பில்லாததினால் தாங்கள் எதைப் பார்க்கலாமென்று விரும்புகிறார்களோ அல்லது எதிர்பார்க்கிறார்களோ அதையே பார்க்கிறார்கள். மேலும் தாங்கள் பார்த்ததே சரியானதும் உண்மையானதும் என்றும் தங்கள் அபிப்பிராயத்துக்கு வேறுபடுகிற மற்றவர்கள் சொல்வது பிசகென்றும் நினைக்கிறார்கள்.

பிரஹ்மக்ஞான சபையைச் சேர்ந்த எல்லோரும் இறந்து போவதற்கு முன்னும் பின்னும் புவர்லோகத்தில் உதவி புரிவோர்களாயிருத்தல் வேண்டும். ஏனெனில், இதைப் பற்றி அவர்களுக்குக் கற்பிக் கப்பட்டிருப் பதுடன் வழிகாட்டும் புஸ்தகங்களும் இருக்கின்றன. ஆகையால் சிரமத்தைப் பாராட்டாதவர்கள் சாகுமுன் இவ்விஷயத்தைப் பற்றி நன்ருய்த் தெரிந்து கொண்டு இறந்த பிறகு புவர்லோகத்தில் தங்கள் சொந்த வீட்டிலிருப்பது போல் இருக்கலாம். தங்களுடைய இன்பமான மானச ரூபங்களாலும் இச்சா ரூபங்களாலும் புவர்லோகத்தில் குடியேற்றலாம். கட்டுக்கதைகளிலும் ஜனங்களுக்கு பீதியையுண்டுபண்ணும் பொருட்டு எழுதப்பட்டிருக்கிற சில மதாசாரப் புஸ்தகங்களிலும் சொல்லியிருக்கும் ஆபாசமான ஜந்துக்களைப்பற்றி தங்கள் மனதில் கொஞ்சமும் நினைக்காமல் தள்ளிவிட்டு அவ்வுருவங்கள் நசித்துப் போகும்படி செய்யலாம். அவைகள் மனிதர்களுடைய எண்ணங்களால் சிருஷ்டிக்கப்பட்ட உருவங்களாகையால் அவைகளைப் பற்றி ஒருவரும் நினையாவிடின் நசித்துப்போவது திண்ணம். நாம் சிருஷ்டிக்கும் மானச ரூபங்கள் உதவிபுரியவும் அல்லது

தடுக்கவும், நன்மைசெய்யவும் அல்லது தீமையை விளைவிக்கவும் உதவுகின்றன வென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். மேற்சொன்ன உருவங்கள் நம்முடைய சம்பந்தம் நீங்கின வெகுகாலத்துக்குப் பிறகும் கூட மேற்சொன்ன காரியங்களைச் செய்கின்றன.

சாமான்யமான நல்ல ஜனங்கள் இறந்துபோன உடனே அவர்களுடைய சினேகிதர்கள் அடையும் பெரிய துக்கமானது இறந்துபோனவர்களுக்கு பெருந்துன்பத்தையுண்டு பண்ணுகிறது. இந்த துக்கமானது ஆத்மாவைக் கிட்டிக் குழப்பமுண்டாக்கி மயக்கத்தையும் உபத்திரவத்தையும் விளைவிக்கிறது. இறந்துபோய் நம்மைவிட்டுப் பிரிந்துபோன அருமையானவர்களைக் குறித்து நாம் துக்கிக்கவும் அவர்கள் நம்முடனிருக்க வேணுமென்று அவாக்கொள்ளவும் கூடாது. நம்முடைய சினேகிதன் இறந்துபோனதைக் குறித்து நாம்வருந்தி அழுவது மிகவும் தப்பிதமாயும் குரூரச் செய்கையாயுமிருக்கிறது. ஏனெனில் அவன் ஜீவதசையில் நடந்த வர்த்தமானங்களை ஒன்றின் பின் ஒன்றாக ஞாபகத்துக்குக் கொண்டுவந்து தான் செய்த பிசகுகளையும் நன்மைகளையும் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும் போது நம்முடைய அழுகையானது அவனுடைய மேற்சொன்ன ஆராய்ச்சியைக் கெடுத்து அவனுடைய ஞாபகமெல்லாம் நம் பக்கம் திரும்புகிறது. இதனால் அவன் மேல்லோக விஷயங்களைத் தெரிந்து கொண்டு முன் செல்ல இடைஞ்சல் உண்டாகிறது அவன் மார்க்கத்தில் மேற்போகும்படி நம்முடைய அன்புள்ள எண்ணங்களையும் பிரார்த்தனைகளையும் அவனுக்கு உதவியாக அனுப்பவேண்டும். நாம் விழித்துக்கொண்டிருக்கும் போது அவன் விஷயமான நம்முடைய துக்கத்தைத் தடுத்து நாம் தூங்கும்போது அன்புடனும் சந்தோஷத்துடன் அவனிடம் செல்லவேண்டும். இவ்விதம் இராக்காலங்களில் எப்போதும் செய்யலாம், சில சமயம் பகலிலும் கூட ஸ்தூ

ல சரீரத்தை தூக்கத்தில் கிடக்கும்படி நமக்கு சாவகாசமிருந்தால் அவ்வித உதவி புரியலாம் ஏனெனில் தூங்குவது சரீரம் தானேயாமல்ல—ஆத்மாவுக்கு தூக்கமே இல்லை.

இது முற்றிலும் உண்மை யென்று இதை அறிந்தவர்கள் நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால் இவ்விஷயங்களில் அவர்கள் முயற்சிசெய்து அனுகூலமடைந்திருக்கிறார்கள். இதுவெல்லாம் அனுபோகத்தினால் வரும் ஞானம்.

அயோக்கியர்களும் துஷ்ட நடத்தையுள்ளவர்களும் இறந்துபோனஉடனே அதிக கஷ்டப்படுகிறார்கள். ஏனெனில் அவர்களுடைய ஆசைகளும் கோபங்களும் அவர்களை விட்டு நீங்கவில்லை, ஸ்தூல சரீரமில்லாததால் அவ்வாசைகளை யனுபவிக்கவும் முடியவில்லை. ஆனால் அந்த ஆசாபாசங்கள் வரவர நசித்துப் போம். அப்பால் அவன் புவர்லோகத்தை விட்டு சுவர்க்க லோகத்துக்குப் போவான். ஸ்தூல சரீரம் போலவே அவனுடைய இச்சா சரீரமும் நசித்துப் போம்.

வி. வெங்குசாமி ஐயர்.

பத்திரிகை விமர்ச்சம்.

ஞானோதயம்:—மலர் 1, இதழ் 3. தூத்துக்குடி ஸ்ரீமான் சிவ. பெ. ராமலிங்கநாடார் பத்திராதிபராக இருந்து நடத்திவரும் மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகையின் 3-வது சஞ்சிகையைப் பார்வையிட்டோம். சாதாரணமாக ஏனைய தமிழ்ப்பத்திரிகைகளைப்போல சில விஷயங்களும், சில கதைகளும் வெளிவருவதுடன், இச்சஞ்சிகையில் மதுரையில் சில காலத்துக்கு முன் நடந்த நாடார் மகாஜன சங்கத்தின் அக்கிராசனராக விருந்த கனம் ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார் அவர்களின் கூற்றுகளைப்பராமர்சித்துக் கூறியவைகளைப் பார்க்க மிகவும சந்தோஷிக்கிறோம். நாடார்கள் முன்னேற்றமடைவதற்கு முக்கிய சாதனம் கல்வி யென்றும், ஐயங்காரவர்கள் கூறிய பல அபிப்பிராயங்கல் நாடார் ஜனங்களுக்கு சம்மதமற்ற கொள்கைகள் என்றும் அறிகிறோம். கள்ளிறக்குவதற்கு மரமேறும் தொழிலை நாடார்கள் விட்டுவிட்டால் நாடார்கள் இன்னும் நன்குமதிக்கப்படுவார்கள் என்று கனம் ஐயங்காரவர்கள் சொன்னதை இப்பத்திரிகை மறுக்கின்றது. இப்பத்திரிகைக்கு நல்வரவு கூறுகிறோம். யாவரும் இதை ஆதரிக்கவேண்டும். 32 பக்கங்கொண்டது வருஷச்சந்தா ரூ 2. (தபாற்கூலியுள்பட.)

ஜீவகாருண்யம்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

உங்கள் குடும்பத்தில் யாராவது வியாதிப்பட்டால் நீங்கள் குலதேவதையாக வணங்கிவ நம் ஸ்ரீ பரமேஸ்வரியின் அம்சமாகிய முத்துமாரியம்மனுக்கு ஆடு, கோழி முதலிய பிராணிகளைப் பலியிடுவதாகப் பிரார்த்தனை செய்து கொண்டு வருஷந்தோறும முக்கியமாய் பங்குனி மாசங்களில் நீங்கள் செய்கிறகொலைகளுக்கு அளவுண்டா? பலியிடுவதற்காக வாங்குகிற ஆடு, கோழிகளை நீங்கள் உங்கள் பிள்ளைகளிலும் பிரியமாக வளர்க்கிறீர்கள். அவைகள் இரை தின்னமாட்டேனென்றால் உங்கள் திருக்கரங்களால் ஊட்டுகிறீர்கள். அந்தப்பிராணிகளும் உங்கள் பெற்ற பிள்ளைகளிலும் உற்ற பிள்ளைகளாய் நீங்கள் எங்குச்சென்றாலும் உங்களைப் பின்பற்றி வருகின்றனவே. அந்தப் பிராணிகளைக் கொலைசெய்ய எத்தனிக்கும்போது அவைகள் உங்கள் முகத்தைப்பார்க்கும் பரிதாபமும் துயரமுந்தரக்கூடிய பார்வையையுங்கண்டு உங்கள் மனம் உருகவில்லையா? போதாக்குறைக்கு பலியிடும்போது ஆடுகளின் கழுத்தில் மாட்டியிருக்கும் கயிற்றைப்பிடித்துக்கொண்டு வெட்டும்படி செய்கிறீர்களே உங்கள் மனங்கல்லா இரும்பா! எதனை யினை சொல்வது. ஐயோ பரிதாபம்! பரிதாபம்!!

உங்கள் மக்களும் நீங்களும் நோய்கொள
எங்கள் மக்களும் யாங்களும் என்செய்தோம்
பொங்கலிட்டுப் புதுமணஞ்செய்கிறீர்
எங்கள் பாவம் இறைவன் கேட்பனே.

என்று வாயில்லாப்பிராணிகள் யீசுவரனிடத்தில் முறையிடுகின்றனவே. இந்தப்பாவம் யாரைச்சேருமென்று நினைக்கிறீர்கள்? ‘செய்த தீவினை செய்தவர்க்கெய்திடும் ஐயமில்லை அரன்றிருவாணையே’ என்ற நீதிவாக்கியத்தை மறந்துவிட்டீர்களோ? இன்றைக்கு நீங்கள் செய்கிற பாவம் நாளை நீங்கள் ஆடுங்கோழியுமாய்ப் பிறக்கச்செய்து உங்களால் கொல்லப்பட்ட ஜீவர்கள் உங்களைப் பழிக்குப் பழி வாங்கும்படி செய்யுமென்பதை நினைத்துக்கொள்ளு

ங்கள். இன்னொன்றும் சொல்லுகிறேன். முன்னோர்கள் உங்களிடத்திலுள்ள வாஞ்சையால் உங்கள் வீட்டிலாவது பக்கத்திலுள்ள வீட்டிலாவது ஆடு கோழிகளாய்ப் பிறந்திருந்தாலுமிருப்பார்கள். அவர்களுக்கு நீங்கள் செய்ய வேண்டிய உதவிக்குப் பதிலாக பலியிடுவீர்களானால் செய்ந்நன்றி கொன்றவர்களாக மாட்டீர்களா? கடவுள் நமக்கு பகுத்தறிவு கொடுத்தது உண்மையையறிந்து பாவத்தை விலக்கி தர்மத்தைக் கொள்ளவேண்டுமென்ற நோக்கமன்றி வேறொன்றுமில்லையே.

இவைகளுக்கெல்லாம் காரண பூதமாயுள்ள ஒருவிஷயத்தையாராய்வோம். நீங்கள் எந்த சக்திக்குப் பலியிடுகிறீர்களோ அந்தத் தேவதையே பலியேற்பதில்லையே. அநேக வருஷங்களுக்கு முன் தக்கன் என்னும் ஓர் அரசன் பரமேசுவரனை மதியாமல் செய்த யாகத்தை அழிப்பதற்காக சுவாமியின் கோபாவேசத்திலிருந்து வீரபத்திரரும் பரமேஸ்வரியின் கோபத்தால் உண்டான வியர்வையிலிருந்து பத்திரகாளி அல்லது துர்க்கை, முத்துமாரி என்று பலநாமங்களையுடைய சக்திவடிவமும் தோன்றி பரம் எதுவென்று அறியாத தக்கன் யாகத்தை அழித்ததாக சரித்திரங்கள் முறையிடுகின்றனவே. இதனால் நாம் என்ன தெரிந்து கொள்ளவேண்டியதிருக்கிற தென்றால், அகங்காரத்தால் தலைதடுமாறி உண்மையான பரம்பொருள் எது அந்தப் பரம்பொருளை அடைவதற்கு வழி என்னவென்று ஆராயாமல் தன்னுடைய நன்மையை மாத்திரம் கவனித்து பிற ஜீவப்பிராணிகளை தெய்வத்தின் பேரைச் சாக்குச்சொல்லிக் கொலை செய்து புலாலுண்டு களிப்போர்களையே தண்டிப்பது அந்த சக்தியின் தொழிலென்பது நன்றாயறியக்கிடக்கின்றதே.

(தொடரும்.)

இராமானந்தயோகிகள்.

புத்தக விமர்சம்

கோசுக்களும் மலேரியா சுரமும்:—சுகாதார நூல் நெ 1. ஏ. சொர்க்கலிங்கம் பிள்ளை, அ. மு. வையாபுரி முதலியார் இயற்றியது. விலை அணா 6. 22 படங்களுடன் கூடியது.

ஜனங்களுக்குள் சுகாதார ஞானத்தைப்பரவச் செய்யும் நோக்கத்துடன் வெளிபோந்த இச்சிறு புத்தகத்தை மிகவும் சந்தோஷத்துடன் வரவேற்கிறோம். கொசுக்களில் அனொபிலீஸ் என்ற வகைக் கொசுவின் பெண்ஜாதிதான் மலேரியா சுரத்துக்கு காரணம் என்பது நவீன சாஸ்திரிகளின் துணிபு. ஆகையால் அந்தக் கொசுவின் அடையாளம், அதன் இருப்பிடம், அதன் முட்டை, புழு, கூட்டுப்புழு, என்ற பரிணாமங்கள், அதை அழிக்கும் வழி, கொசுவால் கடிக்கப்பட்டு சுரம் கண்டவர்கள் என்ன சிகிச்சைசெய்யவேண்டும் என்ற விஷயங்களை நன்றாக இப்புத்தகத்தில் காட்டியிருக்கிறது. அதை யாவரும் வாங்கிப் படித்துப் பிறருக்கும் தெரியப்படுத்தவேண்டியது அவசியம்.

பற்பல பாகங்களில் நடையானது தெளிவாக இல்லை. ஆங்கிலப்புத்தகத்திலிருப்பதை மொழி பெயர்த்ததாகக் காணப்படுவதுடன், தமிழும் நல்ல தமிழாக இல்லை. தவிரவும் "கியூலக்ஸ்" என்ற கொசுவின் முட்டைகள் உருவத்திலும் நிறத்திலும் "காரவே" என்ற ஆங்கிலர்களுக்குத்தெரிந்த விதைகள்போலிருக்கும் என்று சொல்வதால் தமிழர்களுக்கு யாது பயன்படும்? மேலும் ஒவ்வொரு தலைப்பின் கீழும் அல்லது முக்கியமான பதங்களின் அல்லது தொடரின் கீழும் ஆங்கிலப் பதங்களையும், தொடரையும் உபயோகிப்பது என்ற கெட்ட வழக்கம் இப்புத்தகத்தில் ஏராளமாய் காணப்படுகிறது. ஆங்கிலப்பதம் தெரியாதவர்களுக்குத்தான் இப்புத்தகம் முக்கியமாய் ஏற்பட்டதாகையால் வேண்டுமானால் ஒரு பதத்தின் பொருள் தெரியும்படி ஓரிடத்தில் விளக்கிய பிறகு, மற்ற இடங்களில் அதே பதத்தை உபயோகிக்கவேண்டுமேயொழிய, ஆங்கிலப்பதத்தை உபயோகிப்பது உசிதமில்லை. இவ்வித சீர்திருத்தங்கள் அடுத்த பதிப்பில் செய்யப்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

இப்புத்தகத்தில் காட்டியிருக்கும் 22 படங்களும் மிகவும் அழகாகவும் உபயோகமுள்ளவைகளாகவுமிருக்கின்றன. இப்புத்தகத்தைப் போன்ற சாதாரண ஜனங்களுக்கு உபயோகமாகக்கூடிய பல புஸ்தகங்களை ஆசிரியர்கள் வெளியிடுவார்கள் என்று எண்ணுகிறோம்.

பூரணசுகம்:—சுவாமி அபேதாநந்தர் செய்த உபந்யாசத்தின் மொழிபெயர்ப்பு. வேதாந்த வித்யாமாலிகை (1). விலை அணா 1½ மொழி பெயர்ப்பாசிரியர் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை "லோகோபகாரி" பத்திரிகையினின்று எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது.

18 பக்கங்கள் கொண்ட இச்சிறு புத்தகத்தைப்படிக்க மிகவும் சந்தோஷமடைந்தோம். பூர்ணசுகம் யாது, அதை அடையும் வழி ஏது, என்ற விஷயத்தை மிகவும் நன்றாக விளக்கிக்காட்டிய வேதாந்தரசமிகுந்த உபந்யாசத்தை செவ்விய தமிழ் நடையில் வெளியிட்ட ஆசிரியருக்கு நாம் மிகவும் நன்றி பாராட்டுகிறோம். இதை யாவரும் வாங்கிப்படித்துப் பயன் பெறுவார்களாக.

சர்வதேள் விஷ சஞ்சீவி

கதறி வந்தவன் களிப்புடன் செல்வான்!"

"விஷம் தீண்டினவன் நிமிஷத்தில் குணமடைவான்!"

குணமில்லாவிட்டால் ரூ. 100 இனாம் கொடுக்கப்படும்.

நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்ரவம் பொறுக்கமுடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப் பற்றி, நாம் அதிகக் கஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டுபிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பிய டாக்டர்களாலும், தமிழ் வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப்பெற்றது. எமது மேற்கண்ட லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைத் தேள்கொட்டின விடத்தில் உபயோகித்த உடனே ஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச் செய்யும். இவ் விஷ சஞ்சிவியை இன்னும் எலி, நாய், பூரான், செய்யான், பாம்பு, நண்டுத்தெறுக்கால் முதலிய எவ்வித விஷ ஜந்துக்கள் தீண்டினாலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குணமடையலாம். மேற் சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில், பணம் வாபஸ் செய்து விடப்படும்.

இந்த சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள்: இவ் விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டியது. ஏனென்றால், மனிதனை இரவில் [illegible] நித்திரையில் விஷந் தீண்டி விட்டால், அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைபட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. அடியிற்கண்ட விலாசத்திக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

விலை டாக்கட் 1-க்கு 0—8—0

டசன் 1-க்கு 5—0—0

விலாசம்

வி. ஏ. எஸ் பாணி,

நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

கால்ரா மாத்திரைகள்.

இம்மாத்திரைகள் விஷபேதி வராமல் தடுக்கும் வந்தபின்னும் குணப்படுத்தும் ஒவ்வொரு வீட்டிலும் இம்மாத்திரை டப்பி ஒன்றிருக்கவேண்டிய தவசியம். அதிசாரம், சீதபேதி, அக்னிமந்தம், இவைபோன்ற அஜீரணத்தால் வரும் குடலைப் பற்றிய வியாதிகளெல்லாம் இம்மாத்திரைகளால் குணப்படுவது நிச்சயம். கால்ரா வாந்திபேதி கேசுகளில் இம்மருந்து அற்புதமான வேலை செய்கிறது.

30 மாத்திரை கொண்ட டப்பி 1க்கு ரூ 1.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜீ,

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்,

45, மேலக்கோபுர வீதி, மதுரை.